# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
முறையீட்டு மனு எண்கள்: 212/2016 மற்றும் 271/2016

ஆணை நாள்: 30 –06–2018

*******

திரு. எஸ். ராமசாமி,
உதவிப் பொறியாளர்,
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம்,
ஒசூர் ரோடு, கோயம்புத்தூர். — முறையீட்டு மனுதாரர்

1.திருமதி லலிதாமணி,
உதவிப் பொறியாளர்,
இருகூர் பேரூராட்சித் தொகுப்பு.
கோயம்புத்தூர மாவட்டம்.
2.திரு கணேஷ் சங்கர்,
இளநிலை பொறியாளர்,
தொண்டாமுத்தூர் பேரூராட்சி தொகுப்பு
கோயம்புத்தூர் மாவட்டம்.
3.திரு.வி.ராஜா,
உதவி செயற்பொறியாளர்,
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்
அலுவலகம்,
கோயம்புத்தூர்.

— எதிர் மனுதாரர்கள்.
(முறையீட்டு மனு 212/2016)

1.திரு. மகேந்திரன்,
முன்னாள் உதவி செயற்பொறியாளர்,
கோவை மண்டலம்,
(தற்போது நகராட்சிப் பொறியாளர்,
குன்னூர்.)
2.திரு..ராஜா,
உதவி செயற்பொறியாளர்,
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்
அலுவலகம்,
கோயம்புத்தூர்.

— எதிர் மனுதாரர்கள்
(முறையீட்டு மனு 271/2016)

## ஆணை

திரு. எஸ். ராமசாமி, உதவிப் பொறியாளர், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம், கோவை அவர்களின் 18.03.2016 மற்றும் 30.03.2016 நாளிட்ட இரு முறையீட்டு மனுக்கள் இம்முறைமன்ற நடுவத்தில் முறையே 23.03.2016 மற்றும் 05.04.2016 தேதகளில் பெறப்பட்டு முறையீட்டு மனு எண். 212/2016 மற்றும் 271/2016 ஆக பதிவு செய்யப்பட்டன.

மேற்படி முறையீட்டு மனுக்கள் மீது உரிய அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு , பரிசீலிக்கப்பட்டு , கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

திரு. எஸ். இராமசாமி, தனது மேற்கண்ட முறையீட்டு மனுக்களில் திரு. மகேந்திரன், முன்னாள் உதவி செயற்பொறியாளர், திரு. ராஜா, உதவி செயற்பொறியாளர்(ஓய்வு), திருமதி..லலிதாமணி, உதவிப் பொறியாளர் மற்றும் திரு.கணேஷ் சங்கர், இளநிலை பொறியாளர், ஆகியோர் மீது கீழ்க்கண்ட குற்றச்சாட்டுகளை தெரிவித்து விசாரணை கோரி தனது முறையீட்டு மனுக்களை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

**திரு மகேந்திரன், உதவி செயற்பொறியாளர் மீதான குற்றச்சாட்டுகள்:-**

கோவை மாவட்டம், கூடலூர், பெரியநாயக்கன்பாளையம், எண்.04-வீரபாண்டி மற்றும் இடிகரை பேரூராட்சிகளில் ... ஆகிய பேரூராட்சிகளில் நடைபெற்ற சில பணிகளுக்கான மதிப்பீடுகளில் நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதத்தினை இருமுறைகள் மதிப்பீட்டில் சேர்த்து பேரூராட்சிகளுக்கு நிதியிழப்பு ஏற்படும் விதமாக மதிப்பீடுகள் தயாரித்தும், விதிமுறைகளை கடைபிடிக்காமல் தொழில் நுட்ப அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் இதனால் பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

பெரியநெகமம் பேரூராட்சியில் கட்டப்பட்டுள்ள பாலூட்டும் தாய்மார்களுக்கான அறை கட்டுமானப் பணியில் மேலளவு செய்ததில் குறைபாடு என்றும், பல பணிகளுக்கான பட்டியல்களில் செயற்பொறியாளரின் மேலளவுகள் (Test Check measurement) இல்லாமல் ரசீதுகளில் கையொப்பமிட்டு விதிமுறைகளை மீறியுள்ளதாவும் குறிப்பிட்டுள்ளார்.

பல பணிகளுக்கான பட்டியல்களில் குறிப்பாக, காரமடை தொகுப்பு பேரூராட்சி பணிகளின் பட்டியல்களில் இளநிலை பொறியாளரின் அளவீட்டு தேதிகளை மாற்றி ஆவணங்களை திருத்தியுள்ளார் என்றும், மேலும் பணிகளை நேரடியாக ஆய்வு செய்யாமல் அலுவலகத்தில் இருந்தே விதிகளுக்கு புறம்பாக அளவீடுகள் செய்ததாகவும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

**திரு ராஜா, உதவி செயற்பொறியாளர் மீதான குற்றச்சாட்டுகள் :-**

திரு ராஜா, உதவி செயற்பொறியாளர், பேரூராட்சிகளில் நடைபெறும் பணிகளுக்கான மதிப்பீடுகளுக்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கியதில் முறைகேடு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேரூராட்சி செயல் அலுவலர்களிடமிருந்து தொழில் நுட்ப அனுமதி கோரும் கடிதங்களை பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் கவனத்திற்கு கொண்டு செல்லாமல் தொழில் நுட்ப அங்கீகாரம் வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதிப்பீடுகளுக்கான தொழில் நுட்ப அங்கீகாரம் எண்கள் உரிய பதிவேடுகளில் பதியப்படாமலும், ஒரே எண் கொண்ட தொழில் நுட்ப அனுமதி வெவ்வேறு மதிப்பீடுகளுக்கும் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளலூர் பேரூராட்சியில் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கான மதிப்பீடுகளுக்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கியதில் மதிப்பீட்டில் உள்ள பணிகளில் பல பணிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதத்தினை விட அதிக அளவில் கூடுதலாக அனுமதித்து தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணிகளுக்கான மேலளவுகளை பணிகள் நடைபெற்ற இடத்தில் ஆய்வு மேற்கொள்ளாமல் அலுவலகத்திலேயே இருந்து கொண்டு மேலளவு செய்ததாகவும், இது விவரம் மேற்படி அலுவலரின் மாதாந்திர நாட்குறிப்பின் அடிப்படையில் ஆய்வு செய்யவும் கோரப்பட்டுள்ளது.

கிணத்துக்கடவு பேரூராட்சியில் நடைபெற்ற பாலூட்டும் தாய்மார்களுக்கான அறை கட்டும் பணியில் பல முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாகவும் இப்பணிக்கான மேலளவு உரிய முறையில் எடுக்கப்படவில்லை எனவும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

**திருமதி லலிதாமணி, உதவி பொறியாளர் மீதான குற்றச்சாட்டுகள் :-**

இவர் கிணத்துகடவு பேரூராட்சியில் தாய்மார்கள் பாலூட்டும் அறை கட்டும் பணியில் மதிப்பீடுகள் தயாரித்தல் மற்றும் அளவு புத்தக பதிவுகளை முன்னுக்குப் பின் முரணாக தயாரித்து முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும் வெள்ளலூர் பேரூராட்சியில் ரூ.7.28 லட்சம் மதிப்பீட்டில் முறைகேடுகள் செய்து பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுத்தியுள்ளதாக குற்றஞ்சாட்டியுள்ளார்.

**திரு கணேஷ்சங்கர், இளநிலை பொறியாளர் மீதான குற்றச்சாட்டுகள் :-**

சூளேஸ்வரன்பட்டி பேரூராட்சியில் வார்டு எண் 7, வ.உ.சி தெரு மற்றும் வார்டு எண்.6 ஆதித்யா வித்யா மந்திர் பள்ளி அருகில் உள்ள குறுக்குத் தெருவில் தார்ச்சாலை அமைக்கும் பணிக்கு மதிப்பீடு தயாரித்தலில் தார்பூச்சு செய்யும் பணிக்கு கூடுதல் விலை நிர்ணயம் செய்து மதிப்பீடு தயாரித்து பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறைமன்ற நடுவ 21.04.2016ம் நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்கண்ட முறையீடுகளுக்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக்கோரி எதிர் மனுதாரர்களுக்கு ஆணையிடப்பட்டது.

அதன்படி, எதிர் மனுதாரர், திரு. கே.மகேந்திரன், தனது 30.06.2016ம் நாளிட்ட கடிதம் மூலம் தனது எதிர் வாதுரையினை சமர்ப்பித்து மேற்படி அறிக்கையில் முறையீட்டு மனுதாரரால் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளதுடன் தன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நீக்கக் கோரி தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். மேலும் எதிர் மனுதாரர் திரு கணேஷ்சங்கர், தனது 02.06.2016 நாளிட்ட எதிர் வாதுரை மூலமும், எதிர் மனுதாரர் திருமதி லலிதாமணி, தனது 22.06.2016 நாளிட்ட எதிர் வாதுரை மூலமும் தங்களது மறுப்புரையை சமர்ப்பித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவ 05.07.2017 மற்றும் 26.07.2017 நாளிட்ட அறிவிப்பாணைகளின் மூலம் மேற்படி முறையீட்டு மனுதாரர் திரு எஸ்.ராமசாமி அவர்களின் முறையீட்டு மனுக்களில் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக முழுமையான ஆய்வு / விசாரணை மேற்கொண்டும், புகாரில் தெரிவித்துள்ள இனங்கள் தொடர்பாக தணிக்கைத் தடைகள் இருப்பின் அவற்றையும் உள்ளடக்கிய அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 6(4)

(a)ன் கீழ் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், கோவை மண்டலம், அவர்களுக்கு ஆணையிடப்பட்டது.

அதன்படி, கோவை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தனது 12.04.2018 நாளிட்ட கடித ந.க.எண். 119/2018/பே.1/ மற்றும் ந.க.எண். 1728/2017/,கடிதங்களின் மூலம் மேற்படி முறையீட்டு மனுக்கள் மீதான தனது விசாரணை அறிக்கையினை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

திரு கே.மகேந்திரன், உதவி செயற்பொறியாளர் மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பான அறிக்கை :-

மனுதாரரின் புகார் தொடர்பாக சம்பந்தப்பட்ட உதவி செயற்பொறியாளர் திரு.கே.மகேந்திரன் என்பவரை விசாரித்ததில், மதிப்பீடுகளுக்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்படும்போதுஉரியவிதிமுறைகள் பின்பற்றப்பட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளனவா என கூர்ந்தாய்வு செய்துதான் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்படுவதாகவும், பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலை துறைகளின் விலை விகிதத்தில் குறிப்பிடப்படாத இனங்களுக்கு சந்தை மதிப்பில் மூன்று விலைப்புள்ளி பெற்று உரிய விதிமுறைகளுக்குட்பட்டு ஒப்புநோக்கு செய்து அதில் குறைந்த விலைப்புள்ளியினை மதிப்பீடு தயாரிக்கும்போது பயன்படுத்தப்பட்டுள்ளதா என ஆய்வு செய்த பின்னரே மதிப்பீடுகளுக்கு தொழில்நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்டு வருவதாகவும், உதவி பொறியாளர் திரு.எஸ்.ராமசாமி என்பவரின் பணியில் தான் எதுவும் குறுக்கீடுகளோ அல்லது தனது அதிகாரத்தை பயன்படுத்தி அவரை பணி செய்வதிலிருந்து தடுக்கவோ இல்லை என திரு.கே.மகேந்திரன் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூடலூர் பேரூராட்சி, பெரியநாயக்கன்பாளையம் மற்றும் எண் 04.வீரபாண்டி பேரூராட்சிகளில் தார்ச்சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளும்போது மெட்டல் சாலையின் மீது தார் சாலை அமைப்பதற்கு முன், தார் ஊற்றி தார் சாலை அமைக்கும்போது Tack coat எனப்படும் இனத்தில் ஏற்படவிருந்த முறைகேடு ஆரம்ப கட்டத்திலேயே கண்டறியப்பட்டு சுட்டிக்காட்டப்பட்டதின் அடிப்படையில் பேரூராட்சிக்கான நிதியிழப்பு தவிர்க்கப்பட்டுவிட்டது என்ற விவரம் ஆய்வின்போது ஆவணங்களை பரிசீலித்ததில் கண்டறியப்பட்டதாகவும்,மேலும், சூளேஸ்வரன்பட்டி பேரூராட்சியில் தார்ச்சாலை அமைக்கும் பணியில் கீழ்க்கண்ட முறைகேடுகள் புரிந்துள்ளது ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு கண்டறியப்பட்டதாக தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்:-

" தார்ச்சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளும்போது மெட்டல் சாலையின் மீது தார் சாலை அமைப்பதற்கு முன்பு தார் ஊற்றி தார் சாலை அமைக்கும்போது Tack coat எனப்படும் இனத்தில் கீழ்க்காணும் பணிகளில் தவறுகள் நிகழ்ந்துள்ளது.

1. வார்டுஎண்.7-ல் வ.உ.சி. வீதியில் தார்ச்சாலை அமைத்தல் பணி மேற்கொள்ளப்பட்டதில் அளவு புத்தகத்தில் மற்றும் இறுதி பட்டியலில் மேற்படி Tack coat எனும் இனம் இரண்டு முறை பதிவு செய்யப்பட்டு ரூ. 86,910/- நிதியிழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது கண்டறியப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
2. வார்டு எண்.6-ல் ஆதித்யா வித்யா மந்திர் பள்ளி அருகில் உள்ள குறுக்கு வீதியில் தார்ச்சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டதில் அளவு புத்தகம் மற்றும் இறுதிப்

பட்டியலில் மேற்படி Tack coat எனும் பணி இரண்டு முறை பதிவு செய்யப்பட்டு ரூ.30,249/- நிதியிழப்பு ஏற்படுத்தப்பட்டது கண்டறியப்பட்டது."

மேற்கண்டவாறு நிதியிழப்பு தொகை கண்டறியப்பட்டு சுட்டிக்காட்டிய பிறகு ஒப்பந்தக்காரர் பெயரில் பேரூராட்சியில் இருந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து மேற்படி நிதியிழப்பு தொகை பேருராட்சிக் கணக்கில் வரவாக்கப்பட்டு நிதியிழப்பு சரிகட்டப்பட்டதாகவும், ஆனால் இத்தவறு சுட்டிக்காட்டப்படாமல் இருந்தால் நிதியிழப்பானது தொடர்ந்து நிகழ்வதற்கான வாய்ப்பாக இருந்திருக்கும் என பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், கோவை மண்டலம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பெரியநெகமம் பேரூராட்சியில் ரூ.1.55 இலட்சம் மதிப்பீட்டில் தாய்மார்கள் பாலூட்டும் அறை கட்டப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகள் பின்பற்றப்படாமல் விலைப்புள்ளி நடைமுறை பயன்படுத்தப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டதற்கான விதி மீறல் நிகழ்வுகள் கண்டறியப்பட்டதாகவும், குறைந்த கால இடைவெளியில் அறிவிப்பு வெளியிடப்பட்டு, இத்திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிக்கை செய்யப்பட்ட திட்டம் என்பதால் அவசர கதியில் வேலைகள் நடைபெற்றதால் சில தவிர்க்க முடியாத காரணங்களினால் ஏற்பட்டுள்ள விவரங்கள் கண்டறியப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

செயற்பொறியாளரால் Test Check measurement செய்யப்படாமல் உதவி செயற் பொறியாளர் பட்டியலுக்கு கையெழுத்திட்டு பட்டியல் தொகை வழங்க வழிவகை செய்ததில் முறைகேடு நடைபெற்றுள்ளது என தெரிவிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில், பேரூராட்சிகளில் செயற்பொறியாளரால் Test Check measurement செய்யப்படும் பணிகளின் (ரூ.20.00 லட்சம் மதிப்பீடுகளுக்கு மேல் மேற்கொள்ளப்படும் பணிகள்) அளவு புத்தகத்தினை ஆய்வு செய்ததில் பொறியாளரால் Test Check measurement செய்யப்பட்டுள்ளது கண்டறியப்பட்டதாகவும் ஆவணங்களின் அடிப்படையில் ஊழல் நடைபெற்றதற்கான சாத்தியக்கூறுகள் ஏதும் கண்டறியப்படவில்லை எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பல பணிகளில் குறிப்பாக காரமடை பேரூராட்சி தொகுப்பில், அளவு புத்தகங்கள் மற்றும் பட்டியல்களில் இளநிலைப் பொறியாளரால் பணிகள் மேற்கொள்ளப்பட்டதற்கான அளவுகள் பதியப்பட்டு தேதியுடன் கையொப்பம் இடப்பட்டதில் தேதிகளை உதவி செயற்பொறியாளர் தனது கைப்பட தேதிகளை திருத்தம் செய்து ஊழல் புரிந்துள்ளதாக தெரிவிக்கப்பட்ட புகாரினையடுத்து, காரமடை பேரூராட்சி தொகுப்பில் நடைபெற்ற பணிகளுக்கான அளவு புத்தகங்கள் ஆய்வு செய்யப்பட்டதில் அவ்வாறு தேதிகள் மாற்றப்பட்டதற்கான எவ்வித முகாந்திரமும் தென்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டதாக தனது அறிக்கையில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

உதவி செயற்பொறியாளர் பணி நடைபெறும் இடத்திற்கு (work site) நேரடியாக சென்று Check Measurement செய்வதில்லை எனவும் இதற்கு தனியரது மாதாந்திர பணி குறிப்பு ஆய்வு செய்யப்படவேண்டும் என்று புகாரினை தொடர்ந்து தனியரால் அளவு புத்தகத்தில் மேலொப்பம் செய்யப்பட்டதை ஆய்வு செய்ததில் உதவி செயற்பொறியாளரால் Check Measurement செய்யப்பட்டுள்ளது on record உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் ஆனால் மாதாந்திர பணி குறிப்பு இல்லாததால் புகாரின் உண்மைத் தன்மை கண்டறிய வழி வகை இல்லை எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திரு ராஜா, உதவி செயற்பொறியாளர் மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பான அறிக்கை :-

கோயம்புத்தூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் பணிபுரிந்து வந்த திரு. ராஜா, உதவி செயற்பொறியாளரால் மதிப்பீடுகளுக்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதில் விதிமுறைகள் பின்பற்றப்படவில்லை என தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து கோப்புகள் மற்றும் பதிவேடுகளை ஆய்வு செய்ததில் தனியர் பணியாற்றிய காலத்தில் பொறியாளர் பிரிவில் தொழில் நுட்ப அனுமதி வழங்கும் பதிவேட்டில் பதியப்படாமலேயே தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது தெரியவந்ததாகவும், பதிவேட்டில் குறிப்பிட்டுள்ள தொழில் நுட்ப அனுமதி எண் வழங்கப்பட்டுள்ள பணியின் பெயருக்கும் தனியரால் வழங்கப்பட்ட தொழில் நுட்ப எண்ணில் குறிப்பிட்டுள்ள பணியின் பெயருக்கும் வேறுபாடு உள்ளது கண்டறியப்பட்டு உறுதி செய்யப்பட்டதாகவும் எனவே மேற்படி அலுவலர், அலுவலக நடைமுறையினை பின்பற்றப்படாததும் உறுதியாகிறதாக தனது ஆய்வறிக்கையில் கோவை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

பேரூராட்சிகளில் நடைபெறும் வளர்ச்சிப் பணிகள் மற்றும் இதர பணிகளுக்கு உரிய விதிமுறைகளின்படி நிர்வாக அனுமதி பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால் வழங்கப்பட்டு வருவதாகவும், தொழில் நுட்ப அனுமதி உதவி செயற்பொறியாளரால் வழங்கப்படுவதால், செயல் அலுவலர்களால் தொழில் நுட்ப அனுமதி நேரடியாக உதவி செயற்பொறியாளருக்கு முகவரியிட்டு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு வருவது நடைமுறையில் கடைபிடிக்கப்பட்டு வருவதாகவும், இந்நிலையில் பொறியியல் பிரிவில் தொழில்நுட்ப அனுமதி வழங்கும் பதிவேட்டில் பதியப்படாமல் மதிப்பீடுகளுக்கு தொழில்நுட்ப அனுமதி திரு. ராஜா, உதவி செயற்பொறியாளரால் வழங்கப்பட்டுள்ளது, பதிவேடு மற்றும் கோப்புகளை ஒப்பு நோக்கப்பட்டு ஆய்வு செய்ததில் கண்டறியப்பட்டதாகவும், திரு ராஜா, உதவி செயற்பொறியாளரால் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்ட கோப்புகளில் உள்ள மதிப்பீடுகளில் தொழில் நுட்ப அனுமதி எண் இடப்படாமல் வழங்கப்பட்டுள்ளது, கோப்புகளை ஆய்வு செய்ததில் கண்டறியப்பட்டதாகவும், மேலும் ஒரே தொழில் நுட்ப எண்ணை வேறு பணிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளதையும் கோப்புகளை ஆய்வு செய்ததில் உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் இதில் திரு.ராஜா, உதவி செயற்பொறியாளர் அலுவலக நடைமுறைகளை பின்பற்றாதது உறுதியாகிறது எனவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளலூர் பேரூராட்சியில் திரு.ராஜா, உதவி செயற்பொறியாளரால் தொழில் நுட்ப அனுமதி அளிக்கப்பட்ட மதிப்பீடுகளில் அதிகப்படியான விலைகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு ரூ.7.28 இலட்சம் தொகை அளவிற்கு ஊழல் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்ட புகாரினையடுத்து வெள்ளலூர் பேரூராட்சியில் மனுவினை அடிப்படையாக கொண்டு கோப்புகளை ஆய்வு மேற்கொண்டதில் கீழ்க்கண்ட விவரப்படியான பணிகளுக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது தெரியவந்துள்ளதாக தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**1.வெள்ளலூர் பேரூராட்சியில் மின்மயானத்தில் பிரார்த்தனைக் கூடம் கட்டுதல் மதிப்பீட்டு தொகை ரூ.18.00 லட்சம் எனவும் இதில் வெதரிங் கோர்ஸ் அமைக்கும் இனத்தில் ரூ.1,17,272/- கூடுதலாக வழங்க மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.**

மேற்படி பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 26.10.2015ல் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டு பணி உத்திரவு வழங்கப்பட்ட நிலையில் அரசு விதிமுறைகளுக்கு மாறுபட்டு வெதரிங் கோர்ஸ்

அமைக்கும் இனத்தில் " கனமீட்டருக்கு பதிலாக, சதுர மீட்டரில் '' விலைகள் கணக்கிடப்பட்டு கூடுதலாக மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளது ஆவணங்களை ஆய்வு மேற்கொண்டதில் தெரியவந்ததாகவும், இப்பொருள் தொடர்பாக மனுதாரரால் 06.11.2015ம் தேதியில் வெள்ளலூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு புகார் மனு அளிக்கப்பட்ட பின்னர் பணி துவங்கப்பட்டு பணி நடைபெற்று வந்ததால் திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்படாமலும் மன்ற ஒப்புதல் பெறாமலும் மேற்படி வெதரிங் கோர்ஸ் இனத்திற்கு உரிய விதிகளின்படி கன மீட்டரில் கணக்கிடப்பட்டு அளவு புத்தகத்தில் பதியப்பட்டு உதவி செயற்பொறியாளரிடம் மேலொப்பம் வழங்கப்பட்டு ஒப்பந்தக்காரருக்கு பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளதாகவும் மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில் மதிப்பீடு தயாரிக்கும்போது விதிமுறைகளுக்கு முரணாக வெதரிங் கோர்ஸ் இனத்திற்கு கூடுதலாக விலை விகிதம் சேர்க்கப்பட்டதும் அதற்கு தரப்படுத்தப்பட்ட விலைவிகிதப்படி விலை விகிதங்களை சரிபார்த்து சரியான விலை விகிதத்திற்கு உதவி செயற்பொறியாளரால் தொழில் நுட்ப அனுமதி வழங்காமல் கூடுதலான தொகைக்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது விதிமுறைகளுக்கு முரணானதாகும் எனவும் தெரிவித்துள்ளார்.

**2.வெள்ளலூர் பேரூராட்சி 4-வது வார்டு தாளமுத்து நடராஜர் வீதியில் உள்ள எரிவாயு தகன மேடை வளாகத்தில் சடங்குகள் செய்யும் கொட்டகை கட்டுதல் மற்றும் மின் மயானத்தில் மின் வசதி செய்தல் மதிப்பீட்டுத் தொகை ரூ 5.00 லட்சத்தில் வெதரிங் கோர்ஸ் அமைக்கும் இனத்தில் ரூ. 94,389/- கூடுதலாக வழங்க மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளது/**

மேற்படி பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 12.10.2015ல் தொழில் நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்டு பணி உத்திரவு வழங்கப்பட்ட நிலையில் அரசு விதிமுறைகளுக்கு முரணாக மாறுபட்டு வெதரிங் கோர்ஸ் அமைக்கும் இனத்தில் "கனமீட்டருக்கு பதிலாக, சதுர மீட்டரில்'' விலைகள் கணக்கிடப்பட்டு கூடுதலாக மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளது ஆய்வில் கண்டறியப்பட்டதாகவும், இப்பொருள் தொடர்பாக மனுதாரரால் 06.11.2015ல் வெள்ளலூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு புகார் மனு அளிக்கப்பட்ட பின்னர் திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்படாமலும், மன்ற ஒப்புதல் பெறாமலும், பணிகள் 26.10.2016ல் முடிவுற்று மேற்படி வெதரிங் கோர்ஸ் இனத்தில் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை என்பது அளவு புத்தக எண் 29/2015-16ன் வாயிலாக ஆய்வு மேற்கொண்டதில் தெரியவந்ததாகவும், மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில் மதிப்பீடு தயாரிக்கும்போது விதிமுறைகளுக்கு முரணாக வெதரிங் கோர்ஸ் இனத்திற்கு கூடுதலாக விலை விகிதம் சேர்க்கப்பட்டதும் அதற்கு தரப்படுத்தப்பட்ட விலை விகித விவரப்படி விலை விகிதங்களை சரிபார்த்து சரியான விலை விகிதத்திற்கு உதவி செயற்பொறியாளரால் தொழில் நுட்ப அனுமதி வழங்காமல் கூடுதல் தொகைக்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது விதிமுறைகளுக்கு முரணானது எனவும் தெரிவித்துள்ளார்.

**3.வெள்ளலூர் பேரூராட்சி 4-வது வார்டு தாளமுத்து நடராஜர் வீதியில் உள்ள எரிவாயு தகன மேடை வளாகத்தில் குளியலறையுடன் கூடிய முடி திருத்தும் கொட்டகை கட்டுதல் மதிப்பீட்டுத் தொகை ரு 3.50 லட்சம் - வெதரிங் கோர்ஸ் மற்றும் கிரில் அமைக்கும் இனத்தில் ரூ.67,199/- கூடுதலாக வழங்க மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.**

மேற்படி பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 12.10.2015ம் தேதியில் தொழில் நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்டு பணி உத்திரவு வழங்கப்பட்ட நிலையில் அரசு விதிமுறைகளுக்கு மாறுபட்டு

வெதரிங் கோர்ஸ் அமைக்கும் இனத்தில் "கனமீட்டருக்கு பதிலாக, சதுர மீட்டரில்" விலைகள் கணக்கிடப்பட்டு கூடுதலாக மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளது ஆய்வில் கண்டறியப்பட்டதாகவும், இப்பொருள் தொடர்பாக மனுதாரரால் 06.11.2015ல் வெள்ளலூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு புகார் மனு அளிக்கப்பட்ட பின்னர், பணி துவங்கப்பட்டு பணி நடைபெற்று வந்ததால் திருத்திய மதிப்பீடு தயாரிக்காமல் பணி முடிக்கப்பட்டு மேற்படி வெதரிங் கோர்ஸ் பணிக்கு கனமீட்டரில் அளவுகள் மேற்கொள்ளப்பட்டு உதவி செயற்பொறியாளரால் மேலொப்பம் செய்யப்பட்டு பட்டியல் தொகை ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டது ஆய்வில் கண்டறியப்பட்டதாகவும், ஆனால் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்ட மதிப்பீட்டில் உரிய நடைமுறைகளை கடைபிடிக்காமலும், மதிப்பீட்டினை ஆய்வு மேற்கொள்ளாமலும் தொழில் நுட்ப அனுமதி வழங்காமல் உதவி செயற்பொறியாளரால் கூடுதல் தொகைக்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டது விதிமுறைகளுக்கு முரணானது எனவும் தெரிவித்துள்ளார்.

**4.வெள்ளலூர் பேரூராட்சியில் 4–வது வார்டு தாளமுத்து நடராஜர் வீதியில் உள்ள எரிவாயு தகனமேடை வளாகத்தில் குடிநீர் தொட்டியுடன் கழிப்பிடம் கட்டுதல் மதிப்பீட்டுத் தொகை ரூ 8.00 லட்சம் கிரில் அமைக்கும் இனத்தில் ரூ.68,982/– கூடுதலாக வழங்க மதிப்பீட்டில் வழி வகை செய்யப்பட்டுள்ளது.**

மேற்படி பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 12.10.2015ல் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டு பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளதாகவும், அரசு விதி முறைகளுக்கு மாறுபட்டு தொழில் நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்ட நிலையில் மதிப்பீட்டில் கிரில் கேட் அமைக்கும் இனத்தில் அங்கீகரிக்கப்பட்ட விலை விகிதங்களுக்கு முரணாக கூடுதலான விகிதாச்சார அடிப்படையில் அங்கீகாரம் வழங்கப்பட்டு மனுதாரரால் 06.11.2015ல் வெள்ளலூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு புகார் மனு அளிக்கப்பட்ட நிலையில் பணி துவங்கப்பட்டு நடைபெற்று வந்தததால் திருத்திய மதிப்பீடு தயாரிக்காமலும் மன்ற அனுமதி பெறப்படாமலும், மேற்படி கிரில் அமைக்கும் பணிக்கு உரிய விதிகளின்படி சரியான விலை விகிதம் கணக்கிடப்பட்டு அளவு புத்தகத்தில் பதியப்பட்டு உதவி செயற்பொறியாளரால் மேலொப்பம் இடப்பட்டு ஒப்பந்தக்காரருக்கு பட்டியல்படி தொகை வழங்கப்பட்டுள்ளது தெரியவந்தததாகவும், மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில் மதிப்பீடு தயாரிக்கும்போது விதிமுறைகளுக்கு முரணாக கிரில் அமைக்கும் இனத்திற்கு கூடுதலாக விலை விகிதம் சேர்க்கப்பட்டதும் அதற்கு தரப்படுத்தப்பட்ட விலை விகித விவரப்படி விலை விகிதங்களை சரிபார்த்து சரியான விலை விகிதத்திற்கு உதவி செயற்பொறியாளரால் தொழில் நுட்ப அனுமதி வழங்காமல் கூடுதல் தொகைக்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது விதிமுறைகளுக்கு முரணான செயல் எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**5.வெள்ளலூர் பேரூராட்சி மின் மயானத்தில் பேவர் பிளாக் அமைத்தல் மதிப்பீட்டுத் தொகை ரூ. 20.00 லட்சத்தில் பேவர் பிளாக் இனத்தில் ஒரு சதுர மீட்டருக்கு அங்கீகரிக்கப்பட்ட விலை விகிதப்படி ரூ.1226–50க்கு பதில் ரூ. 1423–08க்கு வழி வகை செய்யப்பட்டுள்ளது குறைபாடு.**

மேற்படி பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 26.10.2015ல் தொழில் நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்டு பணி உத்திரவு வழங்கப்பட்ட நிலையில் அரசு விதிமுறைகளுக்கு முரணாக மாறுபட்டு தொழில் நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்ட மதிப்பீட்டில் " பேவர் பிளாக்" அமைக்கும் இனத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட விலை விகிதங்களுக்கு முரணாக விலை விகிதாச்சார

அடிப்படையில் அங்கீகாரம் வழங்கப்பட்டு மனுதாரரால் 06.11.2015ல் வெள்ளலூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு புகார் மனு அளிக்கப்பட்ட பின்னர் பணி துவங்கப்பட்டு நடைபெற்று வந்ததால் திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்படாமலும் மன்ற ஒப்புதல் பெறப்படாமலும் மேற்படி பேவர் பிளாக் அமைக்கும் இனத்திற்கு உரிய விதிகளின்படி சரியான விலை விகிதம் கணக்கிடப்பட்டு அளவு புத்தகத்தில் பதியப்பட்டு உதவி செயற்பொறியாளரால் மேலொப்பம் செய்யப்பட்டு பட்டியல்படி தொகை ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டுள்ளது ஆய்வில் கண்டறியப்பட்டதாகவும், மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில் மதிப்பீடு தயாரிக்கும்போது விதிமுறைகளுக்கு முரணாக " பேவர் பிளாக் " அமைக்கும் பணிக்கு கூடுதலாக விலை விகிதம் சேர்க்கப்பட்டதும் அதற்கு தரப்படுத்தப்பட்ட விலை விகிதப்படி விலை விகிதங்களை சரிபார்த்து சரியான விலை விகிதத்திற்கு உதவி செயற்பொறியாளரால் தொழில் நுட்ப அனுமதி வழங்காமல் கூடுதலான தொகைக்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டது விதிமுறைகளுக்கு முரணானது என பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

6.உதவி செயற்பொறியாளர் பணி நடைபெறும் இடத்திற்கு (Work site) நேரடியாக சென்று Check Measurement செய்யப்படுவதில்லை எனவும் இதற்கு தனியரது பணி ஆய்வுக் குறிப்பினை பார்த்தால் உண்மை தெரியவரும் என்ற குற்றச்சாட்டிற்கு தனியரால் அளவு புத்தகத்தில் மேலொப்பம் செய்யப்பட்டதை ஆய்வு செய்ததில் உதவி செயற்பொறியாளரால் Check Measurement செய்யப்பட்டுள்ளது on record உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், ஆனால் மாதாந்திர பணி குறிப்புகள் இல்லாததால் உண்மைத் தன்மை கண்டறியும் வழி வகை இல்லை எனவும் தனது அறிக்கையில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

7.கிணத்துக்கடவு பேரூராட்சியில் பாலூட்டும் தாய்மார்களுக்கு அறை கட்டும் பணி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிக்கை செய்யப்பட்ட திட்டம் என்பதால் அவசர கதியில் வேலைகள் நடைபெற்றதால் சில தவிர்க்கமுடியாத காரணங்களினால் ஏற்பட்டுள்ள விவரங்கள் கண்டறியப்பட்டதாகவும், மனுவில் கூறப்பட்டுள்ளது போல் முறைகேடுகள் ஏதும் நடைபெறவில்லை எனவும் நடைபெற்ற பணிகளுக்காக மட்டுமே தொகை வழங்கப்பட்டுள்ளது எனவும் இதில் எவ்வித ஊழலும் நடைபெறவில்லை எனவும் மேற்படி பணி நடைபெற்ற 2015-16ம் ஆண்டிற்கான தணிக்கை உள்ளாட்சித் தணிக்கைத் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு மேற்படி பணி தொடர்பாக தடைகள் ஏதும் எழுப்பப்படவில்லை எனவும் கோவை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளார்.

எதிர் மனுதாரர், திருமதி லலிதாமணி, உதவிப் பொறியாளர் மீதான குற்றச்சாட்டுகள் மற்றும் எதிர் மனுதாரர் திரு. ராஜா, உதவி செயற்பொறியாளர் மீதான குற்றச்சாட்டுகள் அனைத்து ஒரே இனங்களாக இருப்பதால் மேற்கண்ட ஆய்வறிக்கையையே எதிர் மனுதாரர் திருமதி.லலிதாமணி மீதான குற்றச்சாட்டுகளுக்கும் பதிலறிக்கையாக பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 16.03.2018 நாளிட்ட அழைப்பாணையின்படி மேற்படி பொருள் தொடர்பாக தங்களது விளக்கங்களை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்ய 15.05.2018 அன்று ஆஜராகத் தெரிவித்து முறையீட்டு மனுதாரர், எதிர் மனுதாரர்களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

அதன்படி 15.05.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான முறையீட்டு மனுதாரர் திரு.எஸ்.இராமசாமி, மேற்படி முறையீட்டு மனுக்களில் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர்கள் மீது புகார்கள் மற்றும் அரசுக்கு ஏற்படும் இழப்பு குறித்து எழுதியுள்ளதாகவும், ஒரு பணியினை இரண்டு முறை குறிப்பிட்டு, அதற்குரிய தொகையினை ஒப்பந்தக்காரர்களுக்கு அளித்ததின் மூலம் பேரூராட்சிக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது எனவும், மற்றும் திட்ட மதிப்பீட்டில் உண்மையான மதிப்பீட்டினை விட அதிக மதிப்பை போட்டு ஒப்பந்தக்காரர்களுக்கு சாதகமாக செய்ததினால் அவர்கள் பலன் அடைகிறார்கள் எனவும், குறிப்பிட்ட சில பேரூராட்சிகளில் குறிப்பிட்ட சில பணிகளை குறித்து புகார் எழுதியுள்ளதாகவும் ஒவ்வொரு ஆண்டு நிதி ஆண்டு ஆரம்பத்தில் கண்காணிப்பு பொறியாளர், பொதுப்பணித்துறையினரால் பணிகளில் ஒவ்வொரு இனங்களுக்கும் அந்த ஆண்டு முழுமைக்கும் ஒவ்வொரு மதிப்பீட்டுத் தொகை நிர்ணயிக்கபடுவதாகவும், அதன் அடிப்படையிலேயே திட்ட மதிப்பீடுகளும் தயாரிக்கப்படவேண்டுமெனவும், ஆனால் அவ்வாறு தயாரிக்காமல் அதிகமாக தயாரித்து அவர்கள் பலனும், பயனும் அடைந்ததாக குறிப்பிட்டுள்ளதாகவும், மூன்று இனங்களில் தவறுகள் நேர்ந்துள்ளதாக தனது மனுவில் குறிப்பிட்டுள்ளதாகவும், சூளேஸ்வரன்பட்டி வார்டு எண்.7–ல் தார்ச்சாலை பணியில் ஒரே இனப் பணியினை இரண்டு முறை குறிப்பிட்டு அதற்கான கூடுதல் தொகை ரூ 86,910/– ம் அதே பேரூராட்சியில் வார்டு எண்.6–ல் ஆதித்யா வித்யா பள்ளி தார் மேற்பூச்சு செய்ததில் இவ்வினத்தினை இரண்டு முறைகள் குறிப்பிட்டு மதிப்பீடு மேற்கொண்ட வகையில் இழப்பு ரூ.30,249/– எனவும், தான் மனு அனுப்பிய பிறகு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேலே குறிப்பிட்ட இரு இழப்புத் தொகைகளும் திரும்ப பெறப்பட்டு விட்டதாகவும் ரூ. 86,910/– இழப்பிற்கு திரு கணேஷ் சங்கர், உதவி பொர்றியாளர் பொறுப்பாவார் எனவும், அவர் தற்போது வேடப்பட்டி தொகுதியில் இளநிலை பொறியாளராக உள்ளார் எனவும் அடுத்த இனத்திற்கும் அவரே பொறுப்பாவர் எனவும் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார்.

15.05.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக கோவை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் திரு. பெ.கணேஷ்ராம் தனது வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"........ திரு.S. ராமசாமி, என்பவர் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் உதவி பொறியாளராக பணிபுரிந்ததாகவும், அவர் அனுப்பிய முறையீட்டு மனுக்கள் குறித்து தன்னால் 12.04.2018ல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், முறையீட்டு மனுதாரர் திரு.எஸ்.ராமசாமி, குறிப்பிட்டுள்ளதில் சிலவற்றில் தவறுகள் நடந்துள்ளதாகவும், சூளேஸ்வரன்பட்டி பேரூராட்சியில் தார்ச்சாலை அமைக்கும் பணியில், சாலை மேல் தார் தெளிக்கும் பணிக்கு விலை விகிதம் இரண்டு முறை குறிப்பிடப்பட்டுள்ளதால் ரூ.30,249/– மற்றும் ரூ.86,910/– ஒப்பந்தக்காரர்களிடம் வழங்கியுள்ளதாகவும், இதற்கான அளவீடு எடுத்த அலுவலர் திரு.கணேஷ் சங்கர், உதவிப் பொறியாளர் எனவும், அவற்றை மேலளவு செய்தது உதவி செயற்பொறியாளர் திரு. கே.மகேந்திரன் எனவும், அதனைத் தொடர்ந்து உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவத்திற்கு புகார் மனு அனுப்பிய பின்னர் அதிகமாக வழங்கிய தொகையான ரூ.1,17,159/– சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரரின் பிணை வைப்புத் தொகையில் இருந்து பிடித்தம் செய்யப்பட்டு சரி செய்து நிதியிழப்பு ஈடு செய்யப்பட்டதாகவும் இந்த புகார் மனுக்களில்அளவீடுகள்விதிகளின்படிகுறிக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும்,

இந்த புகார் மனுக்கள் அனுப்பப்படாமல் இருந்திருந்தால் எவ்வளவு நிதியிழப்பு ஏற்பட்டிருக்கும் என்பதை முறைமன்ற நடுவரின் ஆணைகளின்படி, தான் கணக்கிட்டு ஒரு வார காலத்திற்குள் அறிக்கை சமர்ப்பிப்பதாகவும், இந்த புகார் மனு வரப்பெற்றதைத் தொடர்ந்து இழப்பு ஈடு செய்யப்பட்டது எனவும், விதிகளின்படி அளவுகள் குறிக்கப்படாததற்கு திரு. மகேந்திரன், உதவி செயற்பொறியாளர் (தற்போது காஞ்சிபுரம் நகராட்சி பொறியாளர்) பொறுப்பு எனவும் மதிப்பீடு தயாரித்தலில் உண்மையான மதிப்பீட்டுத் தொகையினை விட அதிகமாக மதிப்பீடு தயார் செய்ததில் குற்றம் சாட்டப்பட்ட எதிர் மனுதாரர்கள் அனைவரும் அடங்குவர் எனவும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், கோவை மண்டலம் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

15.05.2018 அன்று இம்முறைன்ற நடுவத்தின் முன் முன்னாள் கோவை மண்டல உதவி செயற்பொறியாளரும், தற்போதய காஞ்சிபுரம் நகராட்சி பொறியாளருமான திரு.கே.மகேந்திரன், ஆஜராகி, தனது வாக்குமூலத்தில், கோவை மண்டலத்தில் 18 பேரூராட்சிகள் சம்பந்தப்பட்ட பணிகள் மேற்பார்வையிடுவது தனது பணி எனவும், தார் சாலையில் தார் பூச்சு தெளித்தல் இரண்டு தடவை குறிப்பிட்டு அதற்கான தொகை வழங்கப்பட்டு திரும்ப ஒப்பந்தக்காரரின் முன் வைப்புத் தொகையில் ரூ.86,910/- ம் அடுத்த இனத்தில் ரூ.30,249/-ம் பிடித்தம் செய்யப்பட்டதாகவும் அதில் நிதியிழப்பு ஏதும் இல்லை எனவும் மனுதாரர் திரு.ராமசாமி, உதவி பொறியாளராக, பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் பணிபுரிந்தார் எனவும், திட்ட மதிப்பீடுகள் தயார் செய்ததில் தெரியாமல் நடந்த தவறுதானே தவிர தான் யாருக்கும் எதுவும் சொல்லவில்லை எனவும், மேற்படி இழப்பு தொகையினை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் முன்வைப்புத் தொகையில் இருந்து பிடித்தம் செய்து ஈடு செய்யப்பட்டுவிட்டதால் பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏதும் இல்லை எனவும் பதிவு செய்துள்ளார்.

15.05.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தின் முன் கோவை மண்டல உதவி செயற்பொறியாளராக பணிபுரிந்து 30.06.2016ல் ஒய்வு பெற்ற திரு. ராஜா ஆஜராகி, தனது வாக்குமூலத்தில். புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள புகாரின்போது தான் உதவி செயற்பொறியாளராக பணிபுரிந்துள்ளதாகவும், ஒப்பந்தபுள்ளிகள் போடும் முன்னர் மதிப்பீட்டில் தவறுதலாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு, ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டு பணி ஆணைகள் வழங்குவதற்கு முன்னர் பிழைகள் கண்டுபிடிக்கப்பட்டு அவைகள் சரிசெய்யப்பட்டுவிட்டதாகவும், அதற்கு பின்னர்தான் ஒப்பந்தக்காரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டதாகவும் அதை ஒப்பந்தக்காரரும் ஏற்றுக் கொண்டதாகவும், அப்பிழை தெரியாமல் நடந்தது எனவும், அது போன்று அதிகப்படியான தொகைக்கு மதிப்பீடு தயார் செய்வதற்கு யாரும் எந்தவிதமான அழுத்தமும் தரவில்லை எனவும்,ஒப்பந்தக்காரருக்கு இறுதியில் பணி ஆணை வழங்குவதற்கு திருத்தப்பட்ட தொகைதான் வழங்கப்பட்டதாகவும் இதனால் பேரூராட்சிக்கு எந்தவிதமான நிதியிழப்பும் இல்லை எனவும் பதிவு செய்துள்ளார்.

15.05.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தின் முன் ஆஜரான ஈரோடு மண்டல உதவி செயற்பொறியாளர் திருமதி. எம். லலிதாமணி, தனது வாக்குமூலத்தில் தான் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள புகாரின்போது உதவி பொறியாளராக பணிபுரிந்ததாகவும், ஒப்பந்தப்புள்ளி போடும் முன் மதிப்பீட்டில் பணி ஆய்வாளரால் தவறுதலாக கணக்கீடு

செய்யப்பட்டுள்ளதாகவும், ஒப்பந்தபுள்ளிகள் கோரி, ஒப்பந்த படிவங்கள், ஒப்பந்த புள்ளிகள் பெறப்பட்டு பணி ஆணைகள் வழங்குவதற்கு முன்பு பண மதிப்பீடு தயார் செய்த போது ஏற்பட்ட பிழை கண்டுபிடிக்கப்பட்டு அவை சரிசெய்யப்பட்டு அதற்கு பின்புதான் ஒப்பந்தக்காரருக்கு பணி ஆணை கொடுக்கப்பட்டுள்தாகவும் இதை ஒப்பந்தக்காரரும் ஏற்றுக் கொண்டதாகவும் இது தெரியாமல் நடந்துவிட்ட பிழை எனவும் தங்களில் யாரும் இது போன்று அதிகப்படி தொகைக்கு மதிப்பீடு தயார் செய்வதற்கு அழுத்தம் தரவில்லை எனவும், ஒப்பந்தக்காரருக்கு இறுதியில் பணி ஆணை வழங்கும்போது திருத்தப்பட்ட தொகை வழங்கப்பட்டதாகவும், இதில் பேரூராட்சிக்கு இழப்பு, விதி மீறல்கள் எதுவும் நடைபெறவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

15.05.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தின் முன் ஆஜரான கோவை மண்டலம், வேடப்பட்டி பேரூராட்சி இளநிலை பொறியாளரான திரு.T.கணேஷ்சங்கர், தனது வாக்குமூலத்தில், முறையீட்டு மனுதாரரது மனு விவரம் தனக்குத் தெரியும் என்றும், இரண்டு தடவைகள் ஒரு இனம் சேர்க்கப்பட்டு பணம் பட்டுவாடா செய்ததின் அடிப்படையில் பேரூராட்சிக்கு வார்டு எண்.6–ல் தார்ச்சாலை போடும் பணியில் ரூ.30,249/– நிதியிழப்பும், மற்றொரு இனத்தில் வார்டு எண்.7–ல் வ.உ.சி. தெருவில் தார்ச்சாலை பணியில் ரூ.86,910/– நிதியிழப்பும் ஏற்பட்டுள்ளது என்றும், புகார் மனு வந்தவுடன் விரைந்து சென்று ஒவ்வொரு ஒப்பந்ததாரரிடமிருந்தும் முன் வைப்புத் தொகையில் இருந்து 10.02.2016 அன்று சம்பந்தப்பட்ட இழப்புத் தொகை பிடித்தம் செய்து பேரூராட்சி கணக்கில் இருசால் செய்யப்பட்டது என்றும் பதிவு செய்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து கோவை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், இம்முறைமன்ற நடுவத்தில் 15.05.2018 அன்று வாக்குமூலத்தில் உறுதி அளித்தபடி மேற்படி முறையீட்டு மனுக்கள் தொடர்பாக, மேற்படி முறையீட்டு மனுக்கள் பெறப்படாமல் இருந்திருக்கும் பட்சத்தில் ஏற்பட்டிருக்கும் நிதியிழப்பு குறித்த தனது அறிக்கையினை ந.க.எண். 1728/2017/பே.1/நாள் 23.05.2018 வாயிலாக இம்முறைமன்ற நடுவத்திற்கு மின்னஞ்சல் மூலம் சமர்ப்பித்துள்ளார்.

திருமதி. லலிதாமணி, உதவி பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் திரு.ராஜா ஆகியோரால் கோவை மண்டலம், வெள்ளலூர் பேரூராட்சியில் மேற்கொள்ளப்பட்ட ரூ.54.50 லட்சம் மதிப்பீட்டிலான 5 பணிகளில் ரூ.7,43,852/–க்கு மின்மயானத்தில் பிரார்த்தனைக்கூடம், கரும காரிய கொட்டகை, மின்வசதி, குளியலறையுடன் கூடிய முடி திருத்தும் கொட்டகை, குடிநீர் தொட்டியுடன் கழிப்பிடம், மயானத்தில் பேவர் பிளாக் அமைக்கும் பணிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதப்படி மதிப்பீடு தயாரிக்காமல் கூடுதல் தொகைக்கு திருமதி.லலிதாமணி, உதவிப் பொறியாளரால் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அதற்கான தொழில் நுட்ப அனுமதி திரு.ராஜா உதவி செயற்பொறியாளரால் வழங்கப்பட்டதாகவும், மனுதாரர் திரு. எஸ்.இராமசாமி, உதவிப் பொறியாளர், உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு புகார் அளிக்கப்பட்டதை அறிந்து திருத்திய மதிப்பீடுகள் ஏதும் தயார் செய்யாமலும், உயர் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்லாமலும், தன்னிச்சையாக உதவிப் பொறியாளர் திருமதி.லலிதாமணி, திருத்திய பட்டியல் தயாரித்து உதவி செயற்பொறியாளர் திரு.கேடிமகேந்திரன், என்பவரால் மேலொப்பம் செய்யப்பட்டு பேரூராட்சிக்கு ஏற்படவிருந்த நிதியிழப்பு தொகை தவிர்க்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் மனுதாரரால் தமிழ்நாடு உள்ளாட்சி

அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு புகார் அளிக்கப்படாமல் இருந்திருந்தால் மேற்படி ரூ.7,43,852/- க்கு நிதியிழப்பு/ஊழல் நடைபெற வாய்ப்பு ஏற்பட்டிருக்கும் எனவும் மேற்படி அறிக்கையில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

மேலும் மனுதாரர் திரு.எஸ்.இராமசாமி, என்பவர் தெரிவித்துள்ளவாறு பெரியநாயக்கன்பாளையம், மற்றும் என்.04.வீரபாண்டி பேரூராட்சிகளில் மேற்கொள்ளப்பட்ட பணிகளில் Tack Coat இனம் முலம் கூடுதல் தொகை மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படவில்லை எனவும், கோவை மண்டலம், சூளேஸ்வரன்பட்டி மற்றும் கூடலூர் பேரூராட்சிகளில் அத்தலைப்பில் மொத்தம் ரூ. 85.00 லட்சம் மதிப்பீட்டிலான 11 பணிகளில் ரூ. 4,94,079/-க்கான தொகைக்கு நிதியிழப்பு ஏற்படும் வகையில் மதிப்பீடுகளை தயாரித்ததற்கு திருமதி.லலிதாமணி மற்றும் தொழில் நுட்ப அனுமதி வழங்கிய உதவி செயற்பொறியாளர் திரு.மகேந்திரன்ஆகியோர் பொறுப்பாவார் எனவும் தனது அறிக்கையில் கோவை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரின் முறையீட்டு மனுக்கள், முறையீட்டு மனுக்கள் மீதான எதிர்மனுதாரர்களின் விளக்க அறிக்கைகள், கோவை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் அறிக்கை, முறையீட்டு மனுதாரர், எதிர் மனுதாரர்கள் மற்றும் கோவை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் ஆகியோரின் நேரடி வாக்குமூலங்கள், பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் வாக்குமூல அடிப்படையிலான விளக்க அறிக்கை ஆகியன பரிசீலிக்கப்பட்டன. அதில் கீழ்க்கண்ட முரண்பாடுகள் தெரியவருகிறது.

1. முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுக்களில் தெரிவித்துள்ளபடி, ஒவ்வொரு ஆண்டும் பொதுப்பணித்துறையினால் வெளியிடப்படும் தரப்படுத்தப்பட்ட விலை விகிதங்களின் அடிப்படையில் (Schedule of Rates) மதிப்பீடுகள் தயாரிக்கப்படவில்லை என்பது பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் அறிக்கை மற்றும் குற்றம் சாட்டப்பட்ட நபர்களின் வாக்குமூலங்களில் இருந்து புலனாகிறது.

2. மேலும் முறையீட்டு மனுதாரர் முறையீட்டு மனு அனுப்பியதின் அடிப்படையிலேயே மேற்படி அலுவலர்களால் கோவை மாவட்டம், சூளேஸ்வரன்பட்டி வார்டு 7 வ.உ.சி வீதியில் தார்ச்சாலை அமைக்கும் பணியில் Tack coat பணிக்கு இருமுறை அளவுகள் பதிவு செய்யப்பட்டு அதற்கான தொகை ரூ.86,910/- மற்றும் வார்டு எண். 6-ல் ஆதித்யா வித்யா மந்திர் பள்ளி அருகில் உள்ள குறுக்கு வீதியில் தார்ச்சாலை அமைக்கும் பணியில் Tack coat பணிக்கு இருமுறை அளவுகள் பதிவு செய்து அதற்கான தொகை ரூ 30,249/- ஆக மொத்தம் ரூ.1,17,159/- ஒப்பந்தக்காரர்களுக்கு முரண்பாடான மதிப்பீடுகளின் அடிப்படையில் வழங்கப்பட்ட அதிகப்படியான தொகை சம்பந்தபட்ட ஒப்பந்ததாரர்களின் முன்வைப்புத் தொகையில் இருந்து ஈடு செய்யப்பட்டு பேரூராட்சிக்கு வரவாக வைக்கப்பட்டுள்ளது அறிக்கைகளின் வாயிலாக அறியப்பட்டது.

3. மேலும் கோவை மாவட்டம், வெள்ளலூர் பேரூராட்சியில் ரூ.54.50 இலட்சம் மதிப்பீட்டிலான 5 பணிகளுக்கு திருமதி. லலிதாமணி, உதவிப் பொறியாளர் மற்றும் திரு. ராஜா, உதவி செயற்பொறியாளர் ஆகியோரால் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதில் சுமார் ரூ.7,43,852/- க்கு நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதத்தினை விட கூடுதலாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, மனுதாரரால் புகார் மனு அளிக்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி பணிகளுக்கான திருத்திய மதிப்பீடுகள் ஏதும் தயாரிக்காமலும், இப்பணிகளுக்கான

திருத்திய விலை விகிதங்களுக்கு மன்றப் பொருள் ஏதும் பெறப்படாமலும், உரிய தரப்படுத்தப்பட்ட விலை விகிதங்களின் அடிப்படையில் பட்டியல் தயாரித்து தொகை பட்டுவாடா செய்ததின் மூலம் மேற்படி ஊழல்/நிதியிழப்பு ரூ.7,43,852/- தவிர்க்கப்பட்டுள்ளதாக பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் அறிக்கையின் வாயிலாக அறியப்பட்டுள்ளது.

4.மேலும் சூளேஸ்வரன்பட்டி, கூடலூர் பேரூராட்சிகளில் மேற்கொள்ளப்பட்ட ரூ.85.00 லட்சம் மதிப்பிலான 11 பணிகளுக்கு ரூ.4,94,079.00 கூடுதலாக, நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதங்களைவிட அதிக விலை விகிதங்கள் நிர்ணயித்து மதிப்பீடுகள் தயாரித்து தொழில் நுட்ப அனுமதி வழங்கிய நிலையில், மேற்படி கூடுதல் நிதியிழப்பும் முறையீட்டு மனுதாரரின் புகார் மனுவின் அடிப்படையில் தவிர்க்கப்பட்டிருப்பினும், இவ்வாறான கூடுதல் விலை விகிதத்தின் அடிப்படையில் மதிப்பீடு தயாரித்த இளநிலை /உதவி பொறியாளர் மற்றும் தொழில் நுட்ப அனுமதி வழங்கிய உதவி செயற்பொறியாளர் ஆகியோரே இம்முறைகேடுகளுக்கு பொறுப்பானவர்கள் என்பது விசாரணை மற்றும் ஆய்வறிக்கைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

5. மேலும் திரு கே.மகேந்திரன், முன்னாள் உதவி செயற்பொறியாளர், கோவை மண்டலம் என்பவரால் பேரூராட்சிகளிடமிருந்து பெறப்பட்ட மதிப்பீடுகளுக்கு உரிய முறையில் தொழில் நுட்ப எண்கள் வழங்கப்படாமலும், ஒரே எண்ணில் வெவ்வேறு பணிகளுக்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளதும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பேரூராட்சிகளிடமிருந்து தொழில் நுட்ப அனுமதி கோரி வரும் கடிதங்களை பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் கவனத்திற்கு கொண்டு செல்லாமலும் தன் விருப்பம்போல் உரிய நடைமுறைகளை பின்பற்றாமல் தொழில் நுட்ப அனுமதி வழங்கிய நிகழ்வுகளே இதற்கான காரணம் என்பது தெளிவாகிறது.

6. மேலும் குற்றம் சாட்டப்பட்டுள்ள உதவிப் பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் ஆகியோர் மதிப்பீடுகள் தயாரித்ததில் தற்செயலாக தவறுதலாக ஏற்பட்ட நிகழ்வு எனவும், அதிகப்படியாக குறிப்பிட்டுள்ள தொகைகள் திரும்ப பெறப்பட்டு ஈடு செய்யப்பட்டுள்ளதால் பேரூராட்சிகளுக்கு நிதி இழப்பு இல்லை எனவும் தெரிவித்துள்ளது ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை. மதிப்பீடுகள் உரிய முறையில் தயாரிப்பதும், அரசு விதிமுறைகளின்படி தொழில் நுட்ப அனுமதி வழங்குவதும் மேற்படி தொழில் நுட்ப அலுவலர்களது தலையாய கடமை என்பதை மறந்து செயல்பட்டிருப்பது, மதிப்பீடுகளில் கூடுதல் தொகையினை உட்படுத்தி மதிப்பீடு தயாரித்தும் அதன் அடிப்படையில் பணி ஆணை வழங்க நடவடிக்கை எடுத்திருப்பதின் மூலம் புலனாகிறது.

7.மேலும் மனுதாரர் மேற்படி மதிப்பீடுகள் குறித்து புகார் அனுப்பியதின் அடிப்படையிலேயே கூடுதல் தொகை வழங்காமல், பேரூராட்சிகளுக்கு நிதியிழப்பு ஏற்படாத நிலை இருந்துள்ளதே தவிர எதிர் மனுதாரர்கள் தங்கள் வாக்குமூலங்களில் தெரிவித்துள்ளவாறு பணி ஆணை வழங்கும் முன்னரே இந்நிகழ்வுகள் தவிர்க்கப்பட்டது என பதிவு செய்துள்ளது உண்மைக்கு புறம்பானது என்பது உறுதியாகிறது.

8.மேலும் மதிப்பீடுகளில் உள்ள குறைகளை தெரிவித்த பின்னரும் சம்பந்தப்பட்ட பொறியியல் பிரிவினர் அதற்கான திருத்திய மதிப்பீட்டினை தயாரித்து உரிய அனுமதி பெறாமல் இருந்துள்ளதும் ஏற்புடையதாக இல்லை.

9.முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுக்களில் தெரிவித்துள்ளது போல் பணிகளின் அளவுகளை மேலளவுகள் மேற்கொள்ளும்போது பணித்தளத்தில் சென்று பணிகளை ஆய்வு மேற்கொண்ட பின்னரே மேலளவு செய்யப்படவேண்டும் எனவும் அவ்வாறு மேலளவு செய்யப்பட்ட விவரங்கள் சம்பந்தப்பட்டவரின் மாதாந்திர நாட்குறிப்பில் இடம் பெறவேண்டும் என்ற விதிமுறைகள் உள்ள நிலையில், பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் அறிக்கையில் பொறியாளர்களின் மாதாந்திர நாட்குறிப்புகள் இல்லாத நிலையில் இந்நிகழ்வுகளின் உண்மைத் தன்மையினை அறிய இயலவில்லை என குறிப்பிட்டிருப்பதின் மூலம் மேற்படி பொறியியல் அலுவலர்கள் உரிய விதிமுறைகளை பின்பற்றவில்லை என்பதும் புலனாகிறது.

10.எனவே முறையீட்டு மனுதாரர் புகார் அளித்ததன் அடிப்படையிலேயே கூடுதலாக வழங்கப்பட்ட தொகை ரூ.1,17,159/– நிதியிழப்பு கண்டறியப்பட்டு சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர்களின் முன்வைப்புத் தொகையிலிருந்து ஈடு செய்யப்பட்டுள்ளது. மேலும், சில பணிகளுக்கான மதிப்பீடுகளில் கூடுதலாக தொகை கணக்கீடு செய்யப்பட்ட வகையில் மொத்தம் ரூ.12,37,931/– அளவிற்கு மதிப்பீடுகள் திருத்தப்பட்டு முறைகேடுகள் தவிர்க்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட நிகழ்வுகளின் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட முரண்பாடுகளுக்கு பொறுப்பான அலுவலர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ள பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரைத்து, அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 -ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//உத்திரவின்படி – அனுப்பப்படுகிறது//–

செயலாளர். 25/7/18

25/7/18

பெறுநர்

1.திரு. எஸ். ராஜசேகர்,
உதவிப் பொறியாளர்,
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம்,
ஒசூர் ரோடு, கோயம்புத்தூர்.

2.திரு. மகேந்திரன்,
முன்னாள் உதவி செயற்பொறியாளர்,
கோவை மண்டலம்,
(தற்போது) நகராட்சிப் பொறியாளர்,
குன்னூர்.

3.திரு. ராஜா,
முன்னாள் உதவி செயற்பொறியாளர் (ஓய்வு),
69, சாய் இல்லம்,
ஜோதிடர் தெரு,
வெங்கமேடு,
கரூர்–636 006

4.திருமதி லலிதாமணி,
உதவி செயற்பொறியாளர்,
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம்,
கோவை மண்டலம்.

5.திரு டி.கணேஷ் சங்கர்,
இளநிலைப் பொறியாளர்,
வேடப்பட்டி பேரூராட்சி,
கோவை மாவட்டம்.

6.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலர்,
கோயம்புத்தூர்.

7.பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
குறளகம், சென்னை –108.